**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.73/2023**

**PW8**

| | | |
|---|---|---|
| **Name** | : | லட்சுமி |
| **Husband's Name** | : | அருள்குமார் |
| **Village** | : | சேத்பட் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.10.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் சேத்பட்டில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரை போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்ததிலிருந்து எனக்கு தெரியும். கடந்த 05.10.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு சேத்பட் மார்க்கெட் கமிட்டி அருகே காய்கறி வாங்க நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது சேத்பட் பெண் ஆய்வாளர் ஆஜர் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது எதிரி போளூர் ரோட்டில் உள்ள செட்டியார் கடையில் ஒருவரை தாக்கியதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை போலிசார் பதிவு செய்து கொண்டார்கள். அதில் நானும் மரிய நெல்சன் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

அதே இடத்தில் எதிரியிடம் இருந்து போலிசார் ஒரு கருப்பு நிற பதிவு எண்.TN 25 W 5535 இரு சக்கர வாகனம் மகஜரில் கைப்பற்றினார்கள். கைப்பற்றிய மகஜரில் நானும் மரிய நெல்சன் என்வரும் கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ**.3. தற்போது காணொலி மூலம் என்னிடம் காண்பிக்கப்படும் இரு சக்கர வாகனம்தான் அந்த போலிசார் எதிரியிடம் இருந்து கைப்பற்றியது. அது **அ.சா.பொ**.1. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்கள் அந்த இரு சக்கர வாகனத்தின் புகைப்படங்கள்தான். அது **அ.த.சா.ஆ.4. வரிசை (2 எண்ணிக்கை**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய பிற்பகல் 3.00 மணியிலிருந்து 4.00 மணி வரை ஆனது. போலிசார்தான் எதிரியை என்னிடம் அடையாளம் காண்பித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதப்பட்டதை போலிசார் என்னிடம் படித்து காண்பித்தார்கள். பாத்திர கடையின் பெயர் எனக்கு தெரியாது. ராஜகோபால் கடை என்று சொல்வார்கள். போலிசார் காவல் நிலையத்திற்கு என்னை அழைத்து அங்கு தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் மார்க்கெட் கமிட்டிக்கு சாவடியிலிருந்து சென்று கொண்டிருந்தேன். நான்தான் போலிசாரிடம் என்ன நடக்கிறது என்று கேட்டேன். அந்த இடத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள். நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டவாறு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C . Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.